RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22441

OPEN ACCESS

# நாயக்கர் கால சமயப் பண்பாட்டுச் செல்நெறிகள்

ர. சுரேஷ் [அ, *], க. இரமேஷ் [ஆ]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மனிதநேய பள்ளி, தமிழ்நாட்டு மத்தியப் பல்கலைக்கழகம், நீலக்குடி வளாகம், திருவாரூர்-610005, தமிழ்நாடு, இந்தியா

# Religious and Cultural Guidelines of the Naayakar Period

R. Suresh [a, *], G. Ramesh [b]

[a] Department of Tamil, Erode Arts and Science College, Erode-638009, Tamil Nadu, India

[b] Department of Tamil, School of Social Science and Humanities, Central University of Tamil Nadu, Neelakudi, Thiruvarur–610005, Tamil Nadu, India.

* Corresponding Author: asareri@gmail.com

Received: 16-07-2022
Revised: 24-09-2022
Accepted: 01-10-2022
Published: 18-10-2022

Check for updates

**ABSTRACT**

It was during the reign of the Naayakar kings that became the basis for the formation of Hindu culture. Scholars in Tamil Nadu have not paid much attention to the religious status or cultural activities of Tamil Nadu during their time. This period is very important in the religious history of Tamil Nadu and in the history of politics and literature. To review the orthodox religious and cultural identities of the Naayakar period, to examine the reasons why the worship of Lord Murugan and the worship of Goddesses took precedence in promoting Tamil, to draw definite conclusions on the status of Tamil religion during the Naayakar period, to examine the ways in which religions and their philosophies contributed to the power of the Naayakar period, to record the way in which Tamil deities and the rule of the Naayakar kings gained state support, etc. It will help in identifying religious and cultural values. This study compares the religious literature of the Nayak period with the social dynamics of the time and reveals some basic conclusions about religious and cultural norms.

**Keywords:** Naayakar Period, Tamil Religion, Worship, Cultural Identities

## முன்னுரை

தமிழகத்தைப் பொருத்தவரை அன்று தொட்டு இன்று வரை பல்வேறு பண்பாட்டு ஊடாட்டங்களும் அரசியல் ரீதியான தாக்குரவுகளும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கலாம். அதன் பாரிய விளைவுகளாக தமிழ் சார்ந்த மொழி, இன, தேசியப் பிரச்சினைகளை எதிர்கொள்வதென்பது இன்றுவரை பெரும் சவாலாக உள்ளது. இத்தகைய இடையூறுகளுக்கு மத்தியிலும் தமிழ் தன்னுடைய தன்னடையாளத்தை ஏதாவது ஒரு வகையில் தக்க வைத்துக் கொண்டுள்ளதை இலக்கியங்களும் இயக்கவரலாறுகளும் நமக்கு உணர்த்துகின்றன (Muthurajan, 1984). அந்த அடிப்படையில் நாயக்க மன்னருடைய ஆட்சி காலமும் அதன் பின்னணியில் எழுந்த கலை இலக்கிய முயற்சிகளும் கவனத்திற் கொள்ளப்படுகின்றது. இக்கட்டுரை சமய இலக்கிய செல்நெறிகள் குறித்து மட்டும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

## நாயக்கர்கால வரலாறும் இலக்கியங்களும்

இலக்கியம் எனும்போது பொதுவாகவே அது தோன்றுகின்ற சமூகத்தின் பின்னணியோடு வைத்து வாசிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. ஏனென்றால் இலக்கிய உருவாக்கம் என்பது அவ்வக்கால சமூக நிலையை, அரசியல் நிலையை, வர்க்கமுரண்களைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை சங்ககாலத்திய சமூக வாழ்வியலுக்கேற்ப வீரமும் காதலும் உள்ளடக்கமாக அமைந்திருந்தது. அதேபோல பேரரசு உருவாகத் தொடங்கிய காலகட்டத்தில் காப்பியங்களும் பேரரசுகள் சிதைவுற்று சிற்றரசுகள் தோற்றம் பெருகின்ற காலத்தில் சிறு பிரபந்தங்களும் தோன்றுகின்றன. இந்த ஒரு அடிப்படையில்தான் நாயக்கர் கால இலக்கியங்களை அணுக வேண்டும். ஏனென்றால் பேரரசுகள் சிதைவுற்ற 13லிருந்து 18ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட நாயக்க மன்னர்களின் காலத்தைச் சிற்றிலக்கிய காலம் என்று குறிப்பிடுவர். இக்காலகட்டத்தில்தான் எண்ணற்ற சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்றன. அவற்றின் உள்ளடக்கங்கள் உருவவார்ப்பு பற்றிய ஆய்வுகளுக்கு அக்காலகட்டத்தில் வரலாற்றுப் பின்னணி என்பது மிகவும் முக்கியமானதாகும். அந்த வகையில் வரலாற்றை நாம் எப்படி அணுகுவது எவ்வாறு அவதானிப்பது என்பது இங்கு முக்கியமாகப்படுகின்றது. ஏனென்றால் இதுவரை எழுதப்பட்ட வரலாறுகள் எல்லாம் முழுமையான உண்மை வரலாறுகளா? அல்லது புனையப்பட்ட வரலாறுகளா? என்கிற கேள்வி வரலாற்றின் மீதான விமர்சனமாக கவிந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். பெரும்பாலும் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு சார்பாக அவர்களைப் பற்றியதான அவர்களை பெருமைப்படுத்த எழுதப்பட்ட வரலாறாகவே சமூக வரலாறாக எஞ்சி நிற்கின்றன. இவற்றில் புறக்கணிக்கப்பட்ட மக்களை அவர்களின் விளிம்புநிலை சமூக அசைவியக்கத்தை நாம் வரலாற்றின் புனைவைப் புலனாய்ந்து தெரிந்து கொள்ளலாம். இவ்விடத்தில் வரலாற்று அறிஞர் ரொமிலா தாப்பர் வரலாற்று எழுத்தியலின் அபத்தத்தை விளக்குகின்ற 'வரலாறும் வக்கிரங்களும்' எனும் நூலை குறிப்பிட்டாக வேண்டும். எழுதப்பட்ட வரலாறுகள் யாவும் அரசர் வரலாறுகளாகவும் மதத்தலைவர்கள், கவிஞர்கள், போர்மறவர்கள், அமைச்சர்கள், பிரபுக்கள் போன்றவர்களின் வரலாறாகவே இருக்கின்ற நிலையில் சமூகத்தின் இயங்கு விசையாகச் செயல்பட்ட மற்ற மனிதர்களை, அடித்தள மக்களை அவர்களின் பண்பாட்டை விளங்கிக் கொள்வதற்கான முயற்சிகளை நாம்தான் மேற்கொள்ள வேண்டும் என்ற சி. மௌனகுருவின் கூற்றும் கவனிக்கத்தக்கது (Mounaguru, 2006). வரலாறு சார்ந்த இந்தப் புரிதலோடு நாயக்கர் கால சமூக அசைவியக்கத்தை கலை இலக்கிய கலாச்சார மாற்றங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி

தமிழக அரசியல் வரலாற்றில் சேர சோழ பாண்டிய மன்னர்களுக்கு அடுத்து பல்லவர், களப்பிரர் ஆட்சி நிலவியது. அதற்குப் பிறகு ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன், குலோத்துங்க சோழன் ஆகிய மன்னர்கள் ஆண்டனர். அதற்கு அடுத்தபடியாக மீண்டும் இரண்டாம் பாண்டியர் ஆட்சி எழுச்சி பெற்றது. அதன் பின்னர் நாயக்க மன்னர்கள் தமிழ் நாட்டை ஆண்டனர். தமிழ்நாட்டில் செஞ்சி, மதுரை, தஞ்சை முதலிய பகுதிகள் நாயக்க மன்னர் ஆட்சிக் காலத்தில் மிக முக்கிய நகரங்களாக இருந்தன. இப்பகுதிகளில் அமைந்துள்ள கோயில்கள், ஓவியங்கள், சிற்பத் தொகுதிகள் ஆகியவை நாயக்கர் கால கலை பாணியிலான நுட்பமான வேலைப்பாடுகள் அமையப் பெற்று இருப்பதை இன்றும் காணலாம். விஜயநகரப் பேரரசின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த நாயக்கர் ஆட்சி, விஜயநகர வீழ்ச்சிக்குப் பிறகு குறைய தொடங்கியது. சிற்றரசர்கள் தனித்தனி அதிகாரத்துடன் தமிழகத்தில் 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு அந்தந்த பகுதிகளுக்குரிய பிரதிநிதிகளாக தனித்து ஆட்சி அதிகாரத்தை பெறுகின்றனர். இந்நிலையில் தமிழகத்தில் இஸ்லாமிய படையெடுப்பும் அதன் விளைவாக இஸ்லாம் மத பண்பாட்டு பரவலும் தமிழகத்தில் நிலவுகின்றது. ஒருபுறம் வேற்றரசர்களான நாயக்கர்கள் ஆட்சி மற்றொருபுறம் தமிழ் மரபிற்கு பொருந்தாத இஸ்லாம் மத நடைமுறைகள், அவர்களின் ஆட்சி அதிகாரம் என தமிழ் மக்கள் தாம் வாழ்கின்ற சூழ்நிலையிலேயே அந்நியமாகிப் போகின்ற தன்மை ஏற்படுகின்றது. இது மிகவும் கவனிக்கத்தக்கதாகும்.

கிபி 6 ஆம் நூற்றாண்டுகளில் பல்லவ, களப்பிர மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் எதிர்கொண்ட அதே பிரச்சினைகளை நாயக்கர்களும் இஸ்லாமியர்களும் ஆட்சி செலுத்திய இக்காலப்பகுதியில் மக்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. பல்லவர் கால பக்தி இயக்கத்தின் எழுச்சிக்கு எவையெல்லாம் தோற்றுவாயாக அமைந்ததோ அதே சமூக பிரச்சினைகளை நாயக்கர் காலத்திலும் தமிழ் மக்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. விஜயநகர நாயக்கர் ஆட்சிக் காலத்தில் இஸ்லாமியருக்கு எதிராக வலுவாக முன்னெடுக்கப்பட்ட ஒன்று இந்து மதம். இஸ்லாமியர்களின் மத கொள்கைகள், வர்ணாசிரம மருப்பு, உருவ வழிபாட்டு மறுப்பு போன்றவற்றிற்குப் பதிலடி கொடுப்பதாக நாயக்கர்கால இந்து மத கலாச்சார நடவடிக்கைகள் அமைந்திருந்தன. இதன் விளைவாக அரசியல் ரீதியிலான போர்களும் பூசல்களும் ஒருபுறமிருந்தாலும் பண்பாட்டு போர் என்பது மிக ஆழமாக சமூக நிலையில் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. இவ்விடத்தில் நாம் அரசியல் குறித்துப் பேசுவதில் இருந்து விலகி நாயக்கர் காலத்தில் முக்கியத்துவம் வாய்ந்தாக இருந்த சமய இலக்கியச் செல்நெறிகள் குறித்து சில விடயங்களை ஆராயலாம்.

## நாயக்கர்கால இலக்கியப் பதிவுகள்

நாயக்கர் கால இலக்கிய வகைகளில் குறிப்பிடத்தகுந்த இலக்கியம் சிற்றிலக்கியம் அதிலும் குறிப்பாக குறவஞ்சி, பள்ளு, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, உலா, மாலை முதலியவற்றைக் கூறலாம். இவ்விலக்கியங்களிலிருந்து நாம் புரிந்துகொள்ளக்கூடிய விடயங்களாகச் சிலவற்றைத் தொகுக்கலாம்.

1. இவை மக்கள் இலக்கியங்களான நாட்டார் இலக்கிய வடிவத்தை ஏற்றுக் கொண்டமை.
2. பெருஞ்சமய நெறிகளுக்குள்ளாக ஏற்பட்ட பூசல்களை பதிவு செய்துள்ளமை.
3. தாய்தெய்வ வழிபாட்டை முதன்மைப்படுத்தியமை.
4. முருகனை தமிழ் கடவுளாக அடையாளப்படுத்தி முன்னிலைப்படுத்துதல்.
5. தமிழ் மரபு சார்ந்த தமிழ் அடையாளத்தை முன்வைப்பதன் ஊடாக அரச ஆதரவு கோருவது.

என்ற நிலைகளை இலக்கிய பதிவுகளாக காணலாம். இவற்றை பொதுவாக கவனிக்கும் பொழுது நாயக்க மன்னர்கள் தங்களின் தமிழக ஆட்சியை நியாயப்படுத்தவும் இஸ்லாமியர்களுக்கு எதிராகவும் சமய அடிப்படையில் வைதீக இந்துப் பண்பாட்டைப் பேணி வந்ததும், அதன் காரணமாக வைதீகச் சடங்குகளுக்கு முக்கியத்துவம் தந்ததும் பரவலாக இருந்திருக்கின்றது. இதன் காரணமாக மக்களிடையே புழக்கத்தில் இருந்த சிறுதெய்வ வழிபாடுகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டமையை நாம் அறிய முடிகின்றது. வைணவ சம்பிரதாயத்தை, சமய நெறிகளை பின்பற்றியவர்கள் நாயக்கர்கள். இவர்கள் காலத்தில்தான் சைவத்திற்கும் வைணவத்திற்குமான பூசல்கள் வலுவாக இருக்கின்றது. ஆட்சியாளர்கள் இப்பூசல்களை தவிர்க்கும் விதமாக சில காரியங்களை ஆற்றி இருப்பினும் முரண்பாடுகளை எளிதில் கடந்து விட்டு போக முடியாது. முக்கூடற் பள்ளு போன்ற இலக்கியங்கள் இதனைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளன. சைவத்திற்கும் வைணவத்திற்குமான பூசல் ஒரு புறம் இருக்கும் பொழுது வைணவத்திற்குள்ளாகவே தமிழ் மரபும் வைதீக மதமும் ஒன்றுக்கொன்று மோதுவதையும் அது இரு பிரிவாகப் பிரிந்து வடகலை தென்கலை என்று பிளவுபட்டு இருப்பதையும் நன்கு அறியலாம். இந்த முரண்பாடுகளும் பூசல்களும் பெருவாரியான மக்களால் பின்பற்றப்படுகின்ற மக்கள் தெய்வங்களான சிறுதெய்வங்கள் வழிபாட்டு நிலையில் எழுச்சி பெறுவதற்கு காரணமாயின. இந்நிலையில் தமிழ் அடையாளத்துடன் கூடிய தமிழ் தெய்வங்களை மீட்டுருவாக்கம் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதனடியாக தமிழ் வழிபாட்டு மரபுகளும் அகஇலக்கியக் கொள்கைகளும் சமயக் கொள்கைகளும் இலக்கிய உருவாக்கத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழ் மரபில் குறத்தி குறிகூறிப் பாடுதல் இக்காலகட்டத்தில் குறவஞ்சியாகவும் குறமாகவும் வடிவம் பெறுகின்றது. கொற்றவையின் நீட்சியாக மதுரை மீனாட்சியும், பழையோள் குழவி முத்துக்குமாரசாமி ஆகவும் அடையாள உருவாக்கம் பெறுகின்றனர். இதில் தமிழ் அடையாளம் என்பது நாம் ஊன்றி கவனிக்கத்தக்கது (Saami, 1986).

## தமிழ், தமிழ்ச்சமய மீட்டுருவாக்கம்

"பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சை பசும் கொண்டாலே"

எனப் பாடுவதும் முத்துக்குமார சுவாமியை காப்பாயாக என குமரகுருபரர் வேண்டுவதும் தமிழையும் தமிழ்த்தெய்வத்தையும் முன்னிலைப்படுத்துகின்ற முயற்சிதான் (Kumaragurubarar Swamigal, 1952). அதோடு மட்டுமல்லாமல் கணிகண்ணன் கதை தமிழை, தமிழ்ப்புலவரைப் புறுக்கணித்தால் திருமாலே புறமாவார் என்கிற செய்தியை தருகின்றது. திருவிளையாடல் புராணம் பிற இசைகளைவிட தமிழிசையே உயர்ந்தது என்ற கருத்தை ஏமநாதரின் இறுமாப்பை தமிழ் இசையால் விறகு வெட்டியாக வந்த சிவபெருமானே வென்றார் என்கிற செய்தியின் மூலம் பகர்கின்றது. இப்படி தமிழை, தமிழ்ச் சமயத்தை, தமிழ் இசைமரபை என எல்லா மட்டங்களிலும் தமிழ்ப்பண்பாட்டு உருவாக்கம் நாயக்கர் காலத்தில் நிலவியிருக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## தாய்தெய்வ வழிபாட்டின் முதன்மை

தாய் தெய்வ வழிபாடு வேளாண் சமூகத்தோடு தொடர்புடையது என்பதையும் நாயக்கர் கால சமுதாயம் வேளாண் பொருளாதாரத்தை அடியொற்றியது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். தாய் தெய்வ வழிபாடு மிகவும் புராதனமான வேளாண்சமூகத்திலிருந்து உருவாகி வளர்ந்தது என்பதை ஆராய்ச்சியாளர்கள் விளக்குவர். தமிழகத்தில் தாய் தலைமை சமூகத்தின் நீட்சியாக சங்க இலக்கியத்தில் இடம்பெறுகின்ற "ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே" என்கிற பாடலையும் போர்களத்தில் புறமுதுகிட்டு இறந்தவரின் தாய் அவனுக்கு பாலூட்டிய வளமார்பை அறிந்து கொள்வேன் என்கிற பாடலும், குறுந்தொகையில் புலியிருந்து போகிய குகை போல என்று வயிற்றைப் புலிக்குகைக்கு ஒப்புமைப்படுத்தும் பாடலும் இடம் பெற்றிருப்பதை இங்குக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். தாய்மையின் முக்கியத்துவத்தை தாய்த் தலைமைச் சமூகத்தில் தாயே போரை வழி நடத்துபவளாக அமைந்த பான்மையை அப்பாடல்கள் பறைசாற்றுகின்றன. மேலும் கொற்றவை என்ற பெண் தெய்வத்தை வணங்கியே மன்னர்கள் போருக்கு செல்வதாக பதிவு செய்திருக்கும் பாடல்களும் சமூகத்தில் நிலவிய தாய்த்தலைமையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளன. சங்க இலக்கியங்களிலே தாய் தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் ஏராளமாக கிடைக்கின்றன. கொற்றவை, பழையோள், சூர், அணங்கு என பல நிலைகளில் தாய் தெய்வங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை தமிழர்களின் மரபான தெய்வங்கள். இதன் தொடர்ச்சியும் நீட்சியும் ஒவ்வொரு கால இலக்கியங்களிலும் பதிவாகியிருக்கின்றன. கண்ணகி தாய் தெய்வம் ஆகிறாள். மணிமேகலையில் பல குறிப்புகள் தாய் தெய்வங்களைப் பற்றி கிடைக்கின்றன. குமரி தெய்வம், சப்தமாதர் வழிபாடு, அம்மன் வழிபாடு, பகவதியம்மை வழிபாடு, நீலி, காளி என ஏராளமானவற்றை நாம் இங்கு குறிப்பிட முடியும். பக்திக்கால நாயகி பாவம், பாவை வழிபாடு போன்றவையும் தாய் தெய்வ வழிபாட்டின் பிற்கால மாற்றங்களாகும்.

நாயக்கர் காலத்தில் மீனாட்சி அம்மன் வழிபாடு ஏற்றம் பெற்று அதன் தொடர்ச்சியாக சாக்தம் வலுபெற்றதை நாம் காணமுடிகின்றது. மீனாட்சியே பாண்டியரின் ஆட்சிக்குரிய தெய்வமாகக் கருதப்பட்டாள். பாண்டியரின் தாய்தெய்வம் மீனாட்சி. சோழர் காலத்தில் தஞ்சை எப்படி ஒரு கலாச்சார நகரமாக விளங்கியதோ அதே போல நாயக்கர் ஆட்சியில் மதுரை ஒரு கலாச்சார மண்டிலமாக உருமாறியது. திருமலை நாயக்கர் தன் அரசாட்சிக்கு உரிய தகுதியை மீனாட்சி அம்மனை வழங்கியதாக அவளிடமே செங்கோல் பெறுவதாக மீனாட்சி அம்மன் கோயிலில் ஒரு ஓவியம் இருக்கிறது. திருமலைநாயக்கர் இக்கோயிலுக்குப் பல கைங்கரியங்களை செய்து இருக்கின்றார். இங்கு கவனிக்கத்தக்க கதையொன்று உண்டு. ஒருநாள் அங்கயற்க்கண்ணியம்மை திருமலைநாயக்கர் கனவில் தோன்றி திருமலையே என்னை ஒருவரும் கவனிக்கவில்லையே என்று சொன்னதாக செவிவழிச் செய்தி கூறுகின்றது. உடனே திருமலை நாயக்கர் கோவில்ஆட்சியை தானே ஏற்று சக்திக்கு சிறப்புடன் வழிபாட்டினை கொண்டுவந்தார். அது முதலாக சக்தி வழிபாட்டை சிறப்பிக்கும் நவராத்திரி திருவிழா தமிழகத்திற்கு வந்தது என கூறப்படுகின்றது (Srinivasan, 1975). இக்கதையில் நாயக்கர் ஆட்சியில் மீனாட்சி அம்மன் தெய்வம் கவனிப்பார் என்று இருந்தது என்ற செய்தி நமக்கு கிட்டுவதோடு தமிழ்

தெய்வங்களுக்கு அரசு ஆதரவு தேவைப் பட்டது என்பதையும் குறிப்பால் உணர்த்துகின்றது. இதனடிப்படையிலேயே தமிழ் சமய அடையாள உருவாக்கம் வலுப்பெற்று இருக்க வேண்டும்.

## முருகவழிபாடும் தமிழ் அடையாளமும்

குமரகுருபரர் இயற்றிய மீனாட்சி அம்மை குறம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலிய சக்தி வழிபாட்டு நூல்கள் மீனாட்சியை வைணவ தெய்வங்களோடு இணைத்து பேசுவதை காணலாம். மாலவன் தங்கை என்பதெல்லாம் நாயக்கர்கால சமயநிலைக்குத்தக்க அரசஆதரவைப் பெறுவதற்கான ஒரு உறவு முறையை நினைவுபடுத்துவதாக கொள்ளலாம். பொதுவாக நாயக்க மன்னர்கள் அதிகம் முதன்மை அளித்த வைதிக சமயத்திற்குப் புறம்பான அதிலிருந்து விலகி நிற்பதான ஒரு வழிபாட்டு மரபு தான் சக்தி வழிபாடு என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. வேளாண் பொருளாதாரத்தை சார்ந்த அடித்தள மக்களிடையே தாய் தெய்வ வழிபாட்டிற்கு இருந்த செல்வாக்கு காரணமாக இச்சாக்த மரபை நாயக்கர் கால வைதீகம் உள்வாங்கிய நிகழ்வுதான் மீனாட்சியம்மை வழிபாடு முக்கியத்துவம் பெறும் நிகழ்வாகவும் கருத இடமிருக்கிறது. அடுத்து தமிழ் கடவுள் வழிபாடான முருகவழிபாடு நாயக்கர் காலத்தில் முதன்மை பெறுகின்றது. நாயக்கர் காலத்தில்தான் முருக வணக்கத்தை பறைசாற்றும் பல்வகை பக்திப் பனுவல்கள் தோற்றம் கொள்கின்றன. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் கலிவெண்பா, போன்றவை. இவை பெரும்பாலும் தமிழையும் முருகனையும் வழிபாட்டு நிலையில் இணைத்து தமிழ் மரபை மீட்டுருவாக்கும் முயற்சியைச் செய்கின்றன. அதோடு ஆட்சியாளர்களின் அங்கீகாரத்தை கோருகின்ற வகையிலான ஒரு அடையாள முன்னெடுப்பும் நிகழ்ந்திருப்பதை உணர்ந்து கொள்ளலாம். வைணவ மரபில் கண்ணன் ஒரு குழந்தையாக பாவித்து எழுதப்படுவது என்பதும் திருமாலின் மருகனாக உறவு கற்பிக்கப்படுவதென்பதும் அதிக பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதை நோக்கும்பொழுது ஆட்சியாளர்கள் கவனத்தை அவர்களது ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியாக இவற்றைக் கருதலாம்.

## முடிவுரை

நாயக்கர் கால சமய இலக்கியச் செல்நெறிகள் தமிழையும், தமிழ்த் தெய்வங்களையும் முன்னிலைப்படுத்தியதையும், தாய்தெய்வ வழிபாடான சாக்த வழிபாட்டிற்கு ஆட்சியாளர்கள் ஏற்றம் தந்ததையும், சிறுதெய்வ மரபுகள் நாயக்கர் கால வைதீகப் பெருமரபிற்குள் உள்வாங்கப்பட்டதையும் இவ்வாய்வு விளக்கியிருக்கின்றது. மேலும் பக்தி இயக்ககாலத்தில் தோற்றம் பெற்ற நாயகள் நாயகிபாவமும் பாவை வழிபாடும் தாய்தெய்வ வழிபாட்டின் பிற்கால மாற்றங்கள் என்பதையும் இவ்வாய்வு குறிப்பிட்டுக் காட்டி விவாதித்துள்ளது. தமிழகத்தில் இந்து மதக் கலாச்சாரம் பற்றிய ஓர்மை நாயக்கர் காலத்தில் தான் தோற்றம் பெறுகின்றது என்பதையும் அதற்கான சமூகப் பின்புலங்களையும் இக்கட்டுரை விவரித்துள்ளது.

## References

Kumaragurubarar Swamigal (1952) Muthukumara Saami Pillai Tamil, Pathippu, Sri Kumarakurbara Swamygal Prabanda Thirattu, Caasimadam, Thiruppanandal, Chennai, India.

Mounaguru, C. (2006) Pandai Tamizhar Varalaarum Ilakkiyamum, Alaigal Veliyeettagam, Chennai, India.

Muthurajan, K. (1984) Pillai Tamil Illakiyangal, Manivasagar Pathippakam, Chennai, India.

Saami, P.S. (1986) Tamil Illakiyathil Thaitheiva valipadu, New Century Book House, Chennai, India

Srinivasan, R. (1975) Sakthi Vazhipadu, Jayakumari stores, Nagercoil, Chennai, India.

**Acknowledgement:** The Authors would like to thank Erode Arts and Science College Seed Money Project for the funding.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License